**MCOP No.17/2019**

**தேதி- 11.03.2021**

**ம.சா.1 ( ரவி )**

**2-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை-**

விபத்தில் இறந்து போன குப்பம்மாளுக்கு மனுதாரர்களான நாங்கள் மட்டும் தான் வாரிசுகள் என்பதற்கு வாரிசு சான்று தாக்கல் செய்துள்ளோம். நான், 1 மற்றும் 5 மனுதாரர்கள் திருமணமாக தனித்தனியே குடியிருக்கிறோம் என்றால் சரி. 2 மற்றும் 4 மனுதாரர்களும் திருமணமாகி அவர்களது கணவர் வீட்டில் வசிக்கிறார்கள் என்றால் சரி. என் அம்மாவிற்கு விபத்தில் இறக்கும் போது 60 வயது இருக்கும். என் அம்மாவின் வயதை காட்டக்கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. நானும் என் சகோதரர்களும் தனித்தனியே வசித்து வந்தோம், என் அம்மா தனியே வசித்து வந்தார் என்றால் சரி. என் அம்மாவிற்கு நான் தான் சவரட்சனை செய்தேன். என் அம்மா இறக்கும் பொழுது என் பாதுகாப்பில் தான் இருந்தார். என் அம்மாவின் வயது, தொழில், வருமானத்தை நிரூபிக்க எழுத்து பூர்வமான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. என் அம்மாவின் வருமானத்தைச் சார்ந்து நாங்கள் இருந்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. எங்கள் வருமானத்தை நம்பி தான் எங்கள் அம்மா இருந்தார் என்றால் சரியல்ல. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. யாருடைய அஜாக்கிரதையால் விபத்து நடந்தது என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் என் அம்மாவிற்கு 80 வயது இருக்கும் என்றாலும், சரியாக கண் பார்வை இல்லாததால் வாகனம் வருவதை கவனிக்காமல் சாலையின் குறுக்கே வந்ததால் என் அம்மாவின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் அம்மாவின் மீது மோதிய வாகனம் ஒரு லாரி என்று தெரிந்துக் கொண்டோம். லாரி ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் முறையான ஓட்டுநர் உரிமம் இருந்ததா, இல்லையா என்று எனக்கு தெரியாது. விபத்து சமயத்தில் 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர்

உரிமம் இல்லாததால் 2-ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டதல்ல என்றால் சரியல்ல. என் அம்மாவின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்பதால் இந்த மனு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Petitioners / Respondents and admitted by the witness to be correct.

Sd./ S. Syed Barkathullah
Additional District Judge,
Fast Track Court, Arani.